**30.3.2015**

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே திங்கள்கிழமையன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாரில் 20 மி.மீட்டரும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகி யுள்ளது. வெப்ப நிலையைப் பொருத்தமட்டில், ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக திருப்பத்தூரில் 102 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தப்படியாக, திருச்சி, சேலம், மதுரையில் தலா 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயிலின் தாக்கம் காணப் பட்டது. மற்ற மாவட்டங்களைப் பொருத்தமட்டில் பெரும்பாலும் 88 முதல் 95 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெப்பம் நிலவி உள்ளது. மழைக்குவாய்ப்பு:

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாநகரின் குறைந்தபட்ச, அதிகபட்ச வெப்பநிலை முறையே 75, 93 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தக்காளியை மதிப்பு கூட்டு பொருளாக மாற்ற தொழிற்சாலைகள் அமைக்க எதிர்பார்ப்பு! அதிக விளைச்சல் காலங்களில் விலை இல்லாததால் பாதிப்பு

போடி : தேனி மாவட்டத்தில் அதிக விளைச்சல் காலங்களில் தக்காளியை மதிப்புகூட்டு பொருளாக மாற்றி பற்றாக்குறை காலத்தில் பயன்படுத்துவதன் மூலம் விலை ஏற்ற, இறக்கத்தை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். காய்கறிகளில் அதிக விலை ஏற்ற, இறக்கத்தை சந்திப்பது தக்காளிதான். சில நேரங்களில் கிலோ ரூ.50 வரை உச்சவிலைக்கும் உற்பத்தி அதிமாகும் காலங்களில் கிலோ ரூ. 2 க்கு என மிகக்குறைந்த விலைக்கு விற்பனையா கிறது. விலை குறைந்த நேரத்தில் தக்காளியை செடியில் இருந்து பறித்து கூலி கொடுத்து மார்க்கெட்டிற்கு கொண்டு சென்றால் அதற்குரிய விலை கிடைக்காது. இதனால் விவசாயிகள் தக்காளியை செடியில் பறிக்காமல் விட்டு விடுகின்றனர். இதனால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.விளைச்சல் காலங்களில் தக்காளியை பாதுகாத்து, பற்றாக்குறை காலங்களில் பயன்படுத்த முடியாததே இதற்கு காரணம். ஆனால் வட மாநிலங்களில் தக்காளியை விளைச்சல் காலங்களில் தக்காளியை வேறு விதங்களில் உருமாற்றி வைத்து கொள்கின்றனர்.

ஊறுகாய் வடகம், சட்னி பேஸ்ட், ஜூஸ் வடிவில் பாதுகாத்து வைத்துக் கொள்கின்றனர். தட்டுப்பாடான காலங்களில் இவற்றை பயன் படுத்துகின்றனர். தேனி மாவட்டத்தில் இது போன்ற தொழில் நுட்பங்களோ, தொழிற்சாலைகளோ இல்லை. தொழிற்சாலை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு மட்டுமின்றி தொழிலாளர்களுக்கும்

வேலைவாய்ப்பு பெறும் வகையில் பயன் உள்ளதாக இருக்கும்.விவசாயி கணேசன் கூறியதாவது: தக்காளி விளைச்சலுக்கு தேனிமாவட்டம் ஏற்புடையதாக இருக்கிறது. குறுகிய காலத்தில் பலன் தரும் என்பதால் தக்காளி விவசாயம் செய்கிறோம். ஆனால் சில நேரங்களில் போதிய விலை கிடைப்பதில்லை. இதனால் அதிகளவில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. விலை குறைவான காலங்களில் தக்காளியை ஜூஸ், சட்னி, ஊறுகாய் போன்று விதமாக தயார் செய்யும் வகையில் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் சீரான விலை கிடைக்கும், என்றார்.

## தீவிர உயிரியல் கட்டுப்பாட்டு அணுகுமுறை:பூச்சி மேலாண்மைக்கான பயிற்சி நிறைவு

கோபி:பூச்சி மேலாண்மைக்கான தீவிர உயிரியியல் கட்டுப்பாட்டுக்கான அணுகுமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கான பயிற்சி ஓடத்துறை அருகே, ஆண்டிபாளையத்தில் நிறைவு பெற்றது.கடந்த, 20 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழக விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் நெல் சாகுபடி செய்கின்றனர். மருந்து தெளிக்காமல், பூச்சி நோய்களை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.பயிரின் விதைப்பு முதல் அறுவடை வரை நிலவும் பூச்சி தாக்குதலின் முடிவுகள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க, வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்தது.ஹைதராபாத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கும், தேசிய பயிர்வள மேலாண்மை நிலையம், கோபி வேளாண் அறிவியல் நிலையம் இணைந்து, இப்பயிற்சியை நடத்தியது. பூச்சி மேலாண்மைக்கான தீவிர உயிரியியல் கட்டுப்பாட்டுக்கான அணுகுமுறை குறித்து, ஓடத்துறை அருகே ஆண்டிபாளையத்தில் பயிற்சி நிறைவு பெற்றது.எளிதாக உயிர் உரம், மண்புழு உரம் தயாரித்தல், இறை விழுங்கி மற்றும் முட்டை ஒட்டுண்ணி தயாரிக்கும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. உளவியல்

வல்லுனர் சரவணக்குமார் கூறுகையில், நெற்பயிர் சாகுபடியில், இயற்கை முறையில், பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி வழங்கினோம். உயிர் உரங்களை உற்பத்தி செய்யும் முறை, டிரைகொடர்மா விரிடி, சுடோமோனாஸ் உற்பத்தி செய்யும் முறை குறித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.வயலை சுற்றி பூச்செடிகளை வளர்ப்பதால், மஞ்சள் மற்றும் ஊத நிற பூச்சிகள் ஈர்க்கும். இதனால், நெல்லில் இருக்கும் தண்டு துழைப்பான், இலை சுருட்டு புழுக்களை அந்த பூச்சிகள் இறையாக்கி கொள்ளும். இதனால் விவசாயிகள் ரசாயன பூச்சிகளை முற்றிலும் தவிர்க்க முடியும். குழுக்கள் மூலம், இதுபோன்று பயிற்சி நடத்துவதால் விவசாயிகள் நெற்பயிர் சாகுபடியில் எந்த சிரமும் இருக்காது. தரைக்கு கீழே உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைகொடர்மா விரிடி, சுடோமோனாஸ் உதவுகிறது, என்றார்.அறிவியல் விஞ்ஞானி சக்திவேல் பேசுகையில், உயிர் உரங்களான டிரைகொடர்மா விரிடி, சுடோமோனாஸ் ஆகிய உயிர் உரங்களை, திறந்தவெளி வயல்களில், விவசாயிகள் எளிய முறையில் தயாரிப்பது குறித்து பயிற்சி அளித்தோம். பூக்கும் தாவரங்களான, சூரியகாந்தி, எள், ஆமணக்கு, துளசி, செண்டுமல்லி, வயல் ஓரங்களில் நடுவதன் மூலம், நன்மை செய்யும் பூச்சிகளை ஈர்த்து, தீமை செய்யும் பூச்சிகளான, குருத்துபூச்சி, நாவாய் பூச்சிகளை அழிக்க முடியும். இதனால், உணவு சார்ந்த நஞ்சில்லா உணவுப்பொருளை தயாரிக்க முடியும், என்றார்.

## கோபி சொசைட்டியில் ஏலம் ரூ.10 லட்சத்துக்கு விற்பனை

கோபி:கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், பத்து லட்சம் ரூபாய்க்கு, வாழைத்தார்கள் மற்றும் தேங்காய்கள் ஏலம் நேற்று நடந்தது.ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்று பகுதியில் உள்ள பாசன நிலங்களில், வாழை சாகுபடி அதிகம். விவசாயிகள், தாங்கள் சாகுபடி

செய்த வாழை தார்களை, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதற்காக வாரத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில், இங்கு ஏலம் நடக்கும். அதன்படி, கோபியில் நேற்று நடந்த ஏலத்தில், மொத்தம், 9,000 தார்கள் வரத்தானது. கதளி ஒரு கிலோ, 15 ரூபாய்க்கும், நேந்திரம், 21 ரூபாய்க்கும் விலை போனது.செவ்வாழை தார், 550 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 300 ரூபாய், தேன்வாழை, 500 ரஸ்த்தாளி, 320 ரூபாய், மொந்தன், 250 ரூபாய், பூவன், 330 ரூபாய், பச்சைநாடான், 300 ரூபாய்க்கு விலை போனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும், மொத்தம், ஒன்பது லட்சத்துக்கு ஏலம் போனது.இதேபோல், தேங்காய்க்கான ஏலம் நடந்தது. மொத்தம், 8,000 தேங்காய்கள் வரத்தனது. 8 முதல், 15 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காயும், 90 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## <u>விலையில்லா ஆடுகளால் நோய் பரவுகிறதா? ஊட்டியில் கால்நடை துறையினர் ஆய்வு</u>

ஊட்டி : ஊட்டி அருகேயுள்ள மஞ்சனக்கொரை கிராமத்தில், சிலரது ஆடுகள் அடுத்தடுத்த நாட்களில் பலியாகி வருகின்றன. ஆடுகளின் கழுத்துப் பகுதியில் கட்டி ஏற்பட்டு, கண்கள் சிவந்த நிலையில் இறப்பதற்கான காரணம் தெரியாமல், ஆடுகளின் உரிமையாளர்கள் திகைத்தனர்.ஆய்வு நடத்த மாவட்ட கலெக்டர் சங்கர் உத்தரவிட்டார். இதன் அடிப்படையில், நேற்று கால்நடை மருத்துவர் சுகுமார், இறந்த ஆடுகளின் உரிமையாளர்களிடம் விசாரணை நடத்தினார். அவர்கள் வளர்த்து வரும் ஆடுகளை பரிசோதித்தார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனர் மனோகரன் கூறியதாவது: தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், சமவெளி பகுதிகளில் இருந்து, ஆடுகள் வாங்கப்படுகின்றன. அங்கிருந்து

வாங்கப்படும் ஆடுகளுக்கு, நீலகிரி மாவட்டத்தில் குளிரான காலநிலை ஒத்துக் கொள்வதில்லை; இதனால், ஒரு சில ஆடுகள் இறக்கின்றன. ஆடுகளை வாங்கும் முன் தடுப்பூசி, மருந்து கொடுத்து விடுகிறோம். அதன் பின்னரே, பயனாளிகளுக்கு வழங்குகிறோம். இருப்பினும், இறக்கும் வளர்ப்பு ஆடுகளின் பிரேதத்தை பரிசோதனை செய்த பின் தான் எதையும் தெளிவாக கூற முடியும்.இவ்வாறு, மனோகரன் கூறினார்.

## விவசாய அலுவலர்களுக்கு பாசனநீர் சிக்கன பயிற்சி

பழநி : பழநி வேளாண்துறை சார்பில் பாசனநீர் சிக்கனம் குறித்து விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் துணை இயக்குனர் தங்கசாமி தலைமைவகித்தார். பழநிவேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி முன்னிலைவகித்தார். சென்னை நீர்வள நிலவள திட்ட இயக்க தொழில்நுட்ப ஆலோசகர் தயாநிதி கூறுகையில், ""0பாசனநீரை சிக்கனமாக பயன்படுத்தவேண்டும். குறைந்த நீர் தேவையிலுள்ள பயிர்கள் சாகுபடி முறை, மழைநீர் சேமிப்பு, நிலத்தடிநீர் பாதுகாப்பு, பாசன சங்க அமைப்புகள் குறித்து விளக்கினார்". பழநி, தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் ஆகியபகுதியை சேர்ந்த உதவி வேளாண் அலுவலர்கள், பொதுபணிதுறை அலுவலர்கள், தோட்டகலைதுறையினர் உட்பட பலர் பங்கேற்றனர். பழநி வேளாண் அலுவலர் கணேசன், மணிகண்டராஜா, ஜெகநாதன் ஏற்பாடுகளை செய்தனர்.

## கரும்பு மகசூல் போட்டி

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை துறை சார்பில் நடந்த கரும்பு மகசூல் போட்டி எஸ். குச்சி பாளையத்தில் விவசாயி விமலா நிலத்தில் நடந்தது. நடுவர்களாக வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம் ) இளவரசன் , வேளாண்மை அலுவலர் கதிரேசன் முன்னிலையில் நிலத்தில் விளைந்த எஸ்.எஸ்.ஐ 339 ரக கரும்பு அறுவடை நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டியன்,

வேளாண்மை அலுவலர் விஜயசந்தர், ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலைகரும்பு மேலாளர் ராஜேந்திரன், அலுவலர் பார்த்தசாரதி, களப்பணியாளர் ராஜீ, உதவி வேளாண்மை அலுவலர் இந்துமதி, விவசாயி முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர் . அறுவடை செய்த கரும்பு சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## <u>முருங்கை வரத்து அதிகரிப்பு கிலோ ரூ. 5க்கு விற்பனை</u>

தேனி : தேனி மார்கெட்டில் முருங்கை வரத்து அதிகரிப்பால் ஒரு கிலோ ரூ. 5 விற்கப்பட்டது. சென்ற மாதம் முருங்கைகாய் வரத்து குறைவால் ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.200 வரை விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். சில்லரை வியாபாரிகள் ஒரு முருங்கைகாயை ரூ.10 க்கு விற்பனைசெய்தனர். ஆண்டிபட்டி, தேனி, பெரியகுளம் பகுதியில் பங்குனி கோடைமழை பெய்து நல்ல வெயில் அடிப்பதால் முருங்கை மரத்தில் அதிகளவு பூ எடுத்து காய்ப்பு அதிகரித்துள்ளது. இதனால் தேனி காய்கறி சந்தைக்கு முருங்கைகாய் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று மாலை நடந்த மொத்த விற்பனை ஏலத்தில் ஒருகிலோ முருங்கைகாய் ரூ.4 முதல் ரூ.5 வரை ஏலம் போனது. ஒரு கிலோவிற்கு 10 காய் முதல் 15 காய் வரை இருக்கும். சென்ற மாதம் அதிகபட்சமாக கிலோ ரூ.200 க்கு விற்ற முருங்கை தற்போது ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ. 5 க்கு ஏலம் போனதால் விவசாயிகள் எடுப்பு கூலி, மார்க்கெட்டிற்கு கொண்டுவரும் போக்குவரத்து செலவு கூட கட்டுபடியாகவில்லை என கவலையடைந்துள்ளனர். பங்குனி மாதம் முடியும் வரை தொடர்ந்து முருங்கைகாய் வரத்து அதிகரிக்கும் நிலை உள்ளது. இதனால் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>சாராயம் காய்ச்சுபவர்கள் திருந்த பசுமாடுகள் வழங்கும் திட்டம்</u>

உத்தமபாளையம் : கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் திருந்தி வாழ பசுமாடுகள் இலவசமாக வழங்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் 9 பேர்களுக்கு பசுமாடுகள் வழங்கப்படுகிறது. கள்ளச்

சாராய ஒழிப்பில் மதுவிலக்கு அமலாக்க போலீசார் தீவிரம் காட்டி வருகின்றனர். கள்ளச்சாராயம் காய்ச்சுவதை தடுக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கள்ளச் சாரய குற்றவாளிகள் திருந்தி, அந்த தொழிலை விட்டு சமுதாயத்தில் நல்ல முறையில் வாழ்வதற்கு அரசு திட்டம் ஒன்றை அறிவித்துள் ளது. அதன்படி ஒருவருக்கு ரூ. 30 ஆயிரம் மதிப்புள்ள பசுமாடு ஒன்று இலவசமாக வழங்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் ஒன்பது பேர்களுக்கு இலவச பசுக்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உத்தமபாளையம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் ஜெகதீசன் கூறியதாவது: சுருளிப்பட்டியில் 2 பேர்களுக்கும், அம்மாபட்டியில் 3 பேர்களுக்கும், மணலாறில் ஒருவருக்கும் கள்ளச்சாராய தொழிலில் இருந்து விடுபட்டு வாழ பசுக்கள் இன்று வழங்கப்படுகிறது. இது தவிர மாவட்டத்தின் பிற பகுதிகளில் 3 பேர்களுக்கும் பசுமாடுகள் வழங்கப்படுகிறது' என்றார்.

## <u>வனப்பகுதியில் ஏற்படும் "தீ" யை தடுக்க ஆலோசனை</u>

கம்பம் : வனப்பகுதிகளில் கோடை காலங்களில் ஏற்படும் தீயை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வனப்பகுதியில் மதுரை மண்டல வனப்பாதுகாவலர் முகமது இக்ரம்ஷா ஆய்வு நடத்தி ஆலோசனை வழங்கினார். அடர்ந்த வனப்பகுதிகளை கொண்டதாக தேனி வனக்கோட்டம் உள்ளது. வனப்பகுதிகளில் கோடைகாலங்களில் அடிக்கடி தீ பற்றி எரிகிறது. இது வனத்துறையினருக்கு தீர்க்க முடியாத பிரச்னையாக உள்ளது. தற்போது சரணாலயம் உருவான பின் வனஉயிரினங்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கோடை தீயால் வனஉயிரினங்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இதனால் இந்த ஆண்டு கோடையில் ஏற்படும் தீயை தடுக்க சிறப்பு கவனம் செலுத்த வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர். வண்ணாத்திபாறை வனப்பகுதியில் ஆய்வு மேற்கொண்ட மண்டல வனப் பாதுகாவலர் அங்கு கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், வனவிலங்குகளுக்கு குடிநீர் குறித்து ஆய்வு நடத்தினார். கோடையில் தீ வைக்கும் கும்பல் மீது கடும்

நடவடிக்கை எடுக்கவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் அலுவலகர்ளை கேட்டுக் கொண்டார்.

**<u>முடியும் தருவாயில் அயிரை மீன் சீசன்: கிலோ ரூ. ஆயிரம்</u>**

சின்னமனூர் : சின்னமனூர் அருகே முல்லை பெரியாற்றில் பிடிக்கப்படும் அயிரை மீன், சீசன் முடிவடையவுள்ள நிலையில் கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே முல்லை பெரியாற்றில் அயிரை மீன் பிடிப்பதில், மார்க்கையன் கோட்டையை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபடுகின்றனர். அதிகாலையில் துவங்கும் மீன்பிடித்தல் 10 மணி வரை நடக்கிறது. மார்க்கையன்கோட்டையில் செயல்படும் அயிரைமீன் மார்க்கெட்டில் கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரிகள் தேனி, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட நகரங்களில் உள்ள ஓட்டல்களுக்கு விற்பனை செய்கின்றனர். அதிகப்படியான மீன் வரத்திருந்தால் மக்களுக்கு நேரடி விற்பனை செய்யப்படு கிறது. ஆயிரை மீன் பிடிக்கும் முருகன் கூறியதாவது: சின்னமனூர் அருகேயுள்ள முல்லை பெரியாற்றின் மண் வளம் காரணமாக அயிரை மீன் அதிகளவு கிடைக்கிறது. வயல்களிலிருந்து வண்டல் மண்ணுடன் வெளியேறும் தண்ணீர் ஆற்றில் கலக்கிறது. நல்ல மணல் வளத்துடன் உள்ள ஆற்றில் வண்டல் படிவதால் அயிரை மீன் உற்பத்தி அதிகமாக உள்ளது. நவம்பர் முதல் ஏப்ரல் துவக்கம் வரை அயிரை மீன் கிடைக்கும். தற்போது நாள்தோறும் நூறு கிலோ அயிரை மீன் பிடிபடுகிறது. ஒரு கிலோ 800 ரூபாய்க்கு மொத்த வியாபாரிகள் வாங்குகின்றனர். ஓட்டல்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கும், மக்களுக்கு ஆயிரத்து 200 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது, என்றார்.

**<u>ஆத்தூரில் பருத்தி ஏலம் ஒத்திவைப்பு</u>**

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடக்க இருந்த பருத்தி, ஏலம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு

விற்பனை சங்கத்தில், வார நாட்களில் மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடக்கிறது. இந்த ஏலத்தில், வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள், விளைவித்த விளை பொருட்களை கொண்டு, வந்து விற்பனை செய்கின்றனர்.வார நாட்களில் திங்கள் கிழமை (இன்று) பருத்தி ஏலம் நடப்பது வழக்கம். இந்நிலையில், விவசாயிகளிடமிருந்து, விலைக்கு வாங்கிய பருத்தி மூட்டையை, வியாபாரிகள் எடுத்து செல்லாமல், சங்கத்தில் அடுக்கி வைத்துள்ளனர். இதனால், இடப்பற்றாக்குறை ஏற்பட்டு, இன்று நடக்கவிருந்த பருத்தி ஏலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்த ஆலோசனை

பெரம்பலூர்:பார்த்தீனியம் களைச்செடி ஒவ்வாமையை ஏற்படுத்தி குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் ஆஸ்துமா நோயை ஏற்படுத்துகிறது. இதை கட்டுப்படுத்த, செடி பூக்கும் நிலைக்குமுன் கையுறை அணிந்து அல்லது மிஷின் மூலம் வேருடன் அகற்றி மண்ணுக்குள் புதைப்பதால் அவை மக்கும் உரமாகிவிடும். செடி முளைக்கும் முன் களைக்கொல்லியான அட்ரசன் ஒரு லிட்டருக்கு 4 கிராம் அளவில் ஒரு ஹெக்டேருக்கு 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்கலாம்.சோடியம் குளோரைடு 200 கிராம் மற்றும் 2 மில்லி லிட்டர் சோப்பு எண்ணையை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரே மாதிரியாக தெளிக்கலாம். 2, 4- டி சோடியம் உப்பு 8 கிராம் அல்லது கிளைபோசேட் 10 மி.லியுடன் 2 மி.லி சோப்பு கரைசல் சேர்த்து, ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிரில்லாத நிலையில் தெளிக்கலாம். கேசியா, செரிசியா மற்றும் அபுடில்லான், இண்டிக்கம் செடிகளை பயிரில்லாத நிலத்தில் பார்த்தீனியம் செடிகளை அகற்ற பயிரிட வேண்டும்.மெக்சிகன் வண்டு, பூஞ்சான், நுற்புழுக்களை கொண்டு உயிரியல் முறையிலும்

பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்தலாம் என பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.

## கால்நடை காப்பீடு திட்ட தகவல்களை விவசாயிகளுக்கு சொல்ல வலியுறுத்தல்

தர்மபுரி: கால்நடை காப்பீடு திட்ட தகவல்களை, விவசாயிகளிடம் கொண்டு செல்ல வலியுறுத்தப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், மூன்று லட்சத்து 60 பசுக்கள், எருதுகள் மற்றும் கன்றுகள் உள்ளன. மேலும், மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் உள்ளன. மாவட்டத்தில், அரசு சார்பாக வழங்கப்படும், விலையில்லா பசுக்களுக்கு, மத்திய, மாநில அரசு மானியத்துடன், 50 சதவீதம் மற்றும், 70 சதவீத மானியத்துடன், தேசிய கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படுகிறது. இதுகுறித்து, தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னச்சாமி கூறியதாவது: மாவட்டத்தில் உள்ள, அனைத்து பசுக்கள், எருதுகள் மற்றும் கன்றுகளுக்கும், தேசிய கால்நடை காப்பீடு திட்டத்தின் மூலம், காப்பீடு செய்ய வேண்டும். இதில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் வறுமை கோட்டு கீழ் உள்ளவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள், 70 சதவீதம், காப்பீடு தொகையில், மானியம் வழங்குகிறது. ஆனால், மற்ற விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியம்தான் காப்பீடு செய்ய வழங்கப்படுகிறது. சில ஆண்டுகளாக, மாநிலம் முழுவதும், போதிய பருவ மழையில்லாததால், விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ப்போர், அவற்றுக்கு பசுந்தீவனம் மற்றும் தீவனம் வாங்க, அதிகளவு செலவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பசு, எருது வளர்க்கும் அனைத்து விவசாயிகளுக்கும், 70 சதவீத மானியத்துடன், காப்பீடு செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கால்நடை காப்பீடு திட்டம் குறித்து, கால்நடை வளர்ப்பவர்களுக்கு, முழுமையான தகவல்களை, கால்நடைத் துறையினர் மற்றும் மாவட்ட நிர்வாகம் முழுமையாக, கொண்டு

சேர்க்காமல் உள்ளது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், கால்நடைதுறை அலுவலர்கள், தேசிய கால்நடை காப்பீடு திட்டம் குறித்து, அனைத்து, கால்நடை வளர்ப்பவர்களுக்கும் தகவலை கொண்டு சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இத் திட்டத்தை, கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம், கால்நடை வளர்ப்படவர்களுக்கு எடுத்து செல்ல வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கொல்லிமலை மிளகு விளைச்சல் அமோகம்</u>**



சேந்தமங்கலம்: நாமக்கல் மாவட்டத்தில், கொல்லிமலையில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் மிளகு சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு பன்னியூர்-1 என்ற ரகம் அதிக அளவில் விளைந்து வருகிறது. கடந்த ஆண்டு மலையில் மிளகு சாகுபடி தொடங்கியதும், மிளகு செடியில் பூக்கள் பூத்த சமயத்தில் மழை பெய்தது. இதனால் இந்த ஆண்டு நல்ல விளைச்சல் ஏற்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு ஒரு கிலோ மிளகு ரூ.800 முதல் 900 வரை விற்பனையானது. விளைச்சல் குறைவால் அதிக விலை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு நல்ல விளைச்சலால் கிலோவுக்கு ரூ.700 வரை கிடைத்து வருகிறது. இந்த விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக மிளகு விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது, கொல்லிமலை பகுதியில் மிளகு விளைச்சல் அதிகரித்து, அறுவடை தொடங்கி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மிளகு

விவசாயத்தை பொறுத்தவரை களை எடுப்பது மட்டுமே வேலையாக இருப்பதால் அதிக செலவு பிடிப்பதில்லை. மிளகு சீசன் முடிவடைந்ததும் கிராம்பு சீசன் தொடங்கும் என விவசாயிகள் கூறினர்.

## <u>பெருந்துறை கூட்டுறவு சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை ஏலம்</u>

ஈரோடு, : பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1 கோடி வரை கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றதாக அதிகாரிகள் கூறினர். பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் இந்த வாரம் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். மொத்தம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தர கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று ரூ.97.75 முதல் ரூ.102.50 வரை ஏலம் போனது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று ரூ.52.70 முதல் ரூ.96.35 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

## <u>பயிர் பாதுகாப்பு பண்ணை பள்ளியில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்</u>

ஊட்டி, : ஊட்டி அருகேயுள்ள சோலாடா கிராமத்தில் காரட் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு முறை குறித்த பண்ணை பள்ளி துவக்கப்பட்டு விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. தோட்டக்கலைத்துறையின் ஊட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க இயக்கத்தின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் தோட்டக்கலைத்துறையில் உள்ள பல்வேறு வகையான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்

ஒருபகுதியாக சோலாடா கிராமத்தில் செல்வகுமார் என்பவரது தோட்டத்தில் காரட் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு முறை குறித்த பண்ணைப் பள்ளி துவக்கப்பட்டது. இதற்கு உதவி வேளாண் மை அலுவலர் தேவராஜ் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். நிலம் தயார் செய்வதில் இருந்து அறு வடை செய்வது வரையுள்ள சாகுபடி தொழில்நுட்பங்களை நடை முறையாக செயல்முறை விளக்கத்தோடு 6 தலைப்பின் கீழ் பாடத்திட்டம் அமைத்து பயிற்சி அளிப்பதே இப்பண்ணை பள்ளியின் நோக்கமாகும். துவக்க நிகழ்ச்சியில், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியாளர் சாந்தி விளக்கம் அளித்தார். இதில் காரட் சாகுபடி செய்ய மண் மாதிரி எடுத்து அதன் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் உரம் இடுதல், நிலம் தயார் செய்தல், அடி யுரம் இடுதல், நுண்ணுயிர் உரத்தினை தொழு உரத்துடன் கலந்து அடியுரமாக இடுதல், வெள்ளை புழு மற்றும் நூல்புழு மேலாண்மை, நேரடி உரம் பயன்படுத்துதல் குறித்து செயல்முறையுடன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் சோலாடா கிராமத்தை சேர்ந்த அறிஞர் அண்ணா மற்றும் லூர்து விவசாய குழுவினை சேர்ந்த 25 விவசாயிகள் பயனடைந்தனர். இப்பண்ணைபள்ளியினை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரம்யா, உதவி மேலாளர் ஜான் பாஸ்கோ பிரதீப் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>கழுகூரில் நாளை விவசாயிகள் எழுச்சி மாநாடு</u>

தோகைமலை, : தோகைமலை அருகே கழுகூரில் காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டத்திற்கு மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வழியுறுத்தி விவசாயிகள் எழுச்சி மாநாடு, கிழக்கு மாரியம்மன் கோவில் திடலில் நாளை (29ம்தேதி) நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள், பொ துமக்கள் கலந்து கொள்ள காவேரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பா சன விவசாயிகள் கூட்டமை ப்பின் மாநில துணைத்தலை வர் கார்ணாபட்டி முருகேசன் அழைப்பு

விடுத்துள்ளார். அதில் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய 7 மாவட்டங்களில் சுமார் 8 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்றிட வரண்ட பகுதிகள் வளம்பெற, கரூர் மாவட்டம் பாப்பகாப்பட்டி, கழுகூர், தோகைமலை வழியாக வழித்தடங்களை மாற்றி அமைக்க வேண்டும், மாயனூர் தடுப்பணை யிலிருந்து இரட்டை வாய்க்கால் வழியாக ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள புஞ்சை நிலங்களை அழித்து திருச்சி மாவட்டம் மேற்கு புறமாக புதிய கால்வாயை பொதுப்பணித்துறையினர் அமைக்க திட்டம் வகுத்துள்ளதை கைவிட கோருவது, கரூர் மாவட்ட நிர்வாகம் முழு ஒத்துழைப்பை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு கருணைகாட்டவும், இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட உள்ளது.

## <u>கம்போஸ்ட் உரமாக பயன்படுத்தலாம்</u>

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம், பேராவூரணி வட்டாரங்களில் சாலையோரங்களில் குவியலாக கிடக்கும் தென்னை நார்கழிவுகளை மக்கச்செய்து கம்போஸ்ட் உரமாக பயன்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம், பேராவூரணி வட்டாரங்களில் சாலையோரங்களில் குவியலாக கிடக்கும் தென்னை நார்கழிவுகளை மக்கச்செய்து கம்போஸ்ட் உரமாக பயன்படுத்தலாம். கம்போஸ்ட் உரம் தயாரிக்க 100 கிலோ தென்னை நார்கழிவு, ஒரு டன் புளூரோட்டஸ், ஒரு கிலோ காளான்வித்து, 5 கிலோ யூரியா எடுத்து கொண்டு தென்னைநார்கழிவை 5 மீட்டர் ஐ 3 மீட்டர் நீள அகலமுடைய மேடான நிலப்பரப்பில் சமமாக பரப்ப வேண்டும் (சராசரியாக 4 முழுச்சாக்கு கொள்ளளவு கொண்டது). அதன்மேல் 200 கிராம் புளூரோட்டஸ் காளான்வித்துகளை சீராக பரப்பி தண்ணீர் தெளிக்க வேண்டும். பின்னர் அதன்மேல் 100 கிலோ தென்னை நார்கழிவை பரப்பி ஒரு கிலோ யூரியாவை சீராக தூவி மீண்டும் தண்ணீர் தெளிக்க

வேண்டும். இதேபோல் நார்க்கழிவு, புளூரோட்டஸ் காளான்வித்து மற்றும் யூரியாவை 10 அடுக்குகள் வரும் வரை (ஒரு மீட்டர் உயரம் வரை) மாற்றி மாற்றி அடுக்கி ஈரம் காயாதவாறு தண்ணீர் தெளித்துவர வேண்டும். 30 நாட்களுக்கு பிறகு இந்த கழிவானது கறுப்பு நிறத்தில் மாறும். இதுவே கம்போஸ்ட் உரமாக பயிர்களுக்கு பயன்படுத்தக்கூடிய மிகச்சரியான தருணமாகும். இந்த உரத்தால் தென்னை நார்கழிவில் உள்ள நார்ப்பொருட்கள் சிதைக்கப்பட்டு எளிதில் பயிருக்கு கிடைக்கும் சத்தாக மாறுகிறது, கரிமம், நைட்ரஜனின் விகிதாசாரம் 112:1 லிருந்து 21:1 என்ற அளவுக்கு குறைக்கப்படுகிறது. இதனால் நைட்ரஜன் சத்து வீணாவது குறைந்து பயிருக்கு பெருமளவில் கிடைக்கிறது, தழைச்சத்தின் அளவு 0.26 சதத்திலிருந்து 1.06 சதமாக அதிகரிக்கிறது, மக்கிய கம்போஸ்டில் நுண்சத்துக்கள், முதன்மை சத்துக்கள் மற்றும் இரண்டாம் நிலை சத்துக்கள் அளவு அதிகமாக இருக்கும். கம்போஸ்ட் உரமானது மானாவாரி நிலங்களும், களர்- உவர் நிலங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மண்ணின் பவுதீக மற்றும் வேதியல் தன்மைகளை பாதுகாக்கிறது. இந்த உரமானது நிலத்துக்கு சத்துக்கள் அளிப்பதுடன் மண்ணின் நீர்பிடிப்பு திறனை அதிகரிக்க செய்கிறது, ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 5 டன் தொழு உரம் இடும் இடத்தில் கம்போஸ்ட் உரத்தை 2 டன் இட்டாலே தொழு உரத்திற்கு இணையான மகசூல் கிடைக்கும். மேலும் விளைபொருட்களின் தரம், மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் கேடும் தவிர்க்கப்படுகிறது. இந்த உரத்தை தென்னை மற்றும் அனைத்து சாகுபடி பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

## <u>தஞ்சையில் 30ம் தேதி மூலிகை மருத்துவ பயிற்சி</u>

தஞ்சை, : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெள்ளாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவ

பயிற்சி வரும் 30ம் தேதி நடக்கிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் ஆதார் அடையாள அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய வேறு அடையாள அட்டை கொண்டுவர வேண்டும். மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சை என்ற முகவரி அல்லது 98424- 55833 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மைய தலைவர் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதிமுக நிர்வாகிகளுக்கு தீர்மான புத்தகம் வழங்கல்

கும்பகோணம், : கும்பகோணம் ஒன்றிய அதிமுக நிர்வாகிகளுக்கு தீர்மானபுத்தகங்களை மாவட்ட செயலாளரும், எம்எல்ஏவுமான ரங்கசாமி வழங்கினார். கும்பகோணம் அதிமுக ஒன்றிய பகுதியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிளை நிர்வாகிகளுக்கு தீர்மான புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. ஒன்றிய செயலாளர் அழகு.த.சின்னையன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளரும், எம்எல்ஏவுமான ரங்கசாமி பங்கேற்று கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ள 285 கிளை செயலாளர் கள், 3 பேரூராட்சியில் உள்ள 45 வார்டு செயலாளர்களுக்கு தீர்மான புத்தகங்களை வழங்கினார். மாநில கைத்தறி பிரிவு செயலாளர் லெனின், தொகுதி செயலாளர் செந்தில், மாவட்ட கவுன்சிலர்கள் குழந்தைவேல், மலர்கொடி, ஒன்றிய கவுன்சிலர்கள் செல்லதம்பி, ராஜா, தலைமை கழக பேச்சாளர் சுப்பையன், ஊராட்சி தலைவர்கள் மாணிக்கவேல், அய்யப்பன் கலந்து கொண்டனர்.

## நடப்பாண்டு கோடை பருவத்தில் 10,600 எக்டேரில் நெல் சாகுபடி செய்ய திட்டம்

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டு கோடை பருவத்தில் 10,600 எக்டேரில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 7,895

எக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாக குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து பேசும்போது, இதுவரை சம்பாவில் 1,06,950 எக்டேரிலும், தாளடியில் 27,955 எக்டேரிலும் நெல் அறுவடை முடிந்துள்ளது. இதில் சராசரியாக ஒரு எக்டேருக்கு 5,785 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. கோடை சாகு படிக்கான நாற்றங்கால் இதுவரை 568 எக்டேரில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு கோடை பருவத்தில் 7,400 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 5,132 எக்டேரில் நடவு முடிந்துள்ளது. கோடை பருவத்துக்கான நெல் ரகங்களான ஆடு துறை 43, 45, 36 விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பயறுவகை பயிர்கள் 20,150 எக்டேரிலும், எண்ணைவித்து பயிர்கள் 9,510 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில பருத்தி சாகுபடி திட்டம் பாபநாசம், அம்மாப்பேட்டை, கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் வட்டாரத்தில் ரூ.4.45 லட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குனரிடம் முன்பதிவு செய்து கொள்ளலாம். நில நீர் ஆய்வுக்கருவி ஒரு பாய்ண்டுக்கு ரூ.500, மின்னியல் ஆய்வு கருவி ஒரு கிணற்றுக்கு ரூ.1000 கட்டணமாக செலுத்தி நிலத்தடி நீர்மட்டம் எந்த ஆழத்தில் உள்ளது என் பதை அறிந்து கொள்ளலாம். வேளாண் பணிகளில் இயந்திர மயமாக்கலை ஊக்கப்படுத்தும் வகையில் 17 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு உழுவைகள் ரூ.19.50 லட்சத்துக்கும், இதர விவசாயிகளுக்கு 1 உயர்சக்தி குதிரை திறனுள்ள உழுவை ரூ.1.25 லட்சம் மானியத்திலும்

வழங்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 2014 அக்டோபர் முதல் கடந்த 21ம் தேதி வரை 2,43,858 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2012- 13ல் 2,29,873 மெ.டன்னும், 2013-14ல் 3,01,932 மெ.டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் டிஆர்ஓ சந்திரசேகரன், கூட்டுறவுசங்கங்களின் இணைப் பதிவாளர் சுப்பிரமணியன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அருள்மொழி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமதுபாதுஷா மற்றும் வேளாண்த்துறை அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

## காவிரி குத்தகை விவசாய சங்க கூட்டம்

திருவிடைமருதூர், : திருவிடைமருதூரில் காவிரி குத்தகை விவசாய சஙக கூட்டம் நேற்று நடந்தது. சஙக தலைவர் முருகன் தலைமை வகித்தார். சஙக ஆலோசகர் ரஙகராஜன் வரவேற்றார். செயலாளர் அமிர்த கண்ணன் முன் னிலை வகித்து பேசும்போது, மீத்தேன் எரிவாயு பற்றிய தெளிவான முடிவு பட்ஜெட்டில் இல்லை. கர்நாடகத்தின் மேகதாது அணை யின் கட்டுமானத்தை தடுக்க நடவடிக்கை இல்லை. விவசாயிகளின் கடன் சுமை பலமடஙகு உயர்ந்துளளது. விவசாய உணவு உற்பத்தியில் 100 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக குறைந்துள்ளதற்கு கட்டுப்படியான விலை இல்லாதது தான் காரணம். கரும்பின் நிலையோ அதைவிட மோசமாகியுள்ளது. 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் விவசாயி களுக்கு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துவிட்டு தற்போது 5 மணி நேரம்கூட வழங்கப்படுவதில்லை. நிலத்தடி நீர் குறைந்துவிட்ட நிலையில் நீர் மேலாண்மை தொடர் பான தனி நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. விவசாயிகளின் கடன்களை தள்ளு படி செய்ய வேண்டும் என்றார்.

## கால்நடை மருத்துவ முகாம்

ஆலங்குடி, : ஆலங்குடி அடுத்த மேற்பனைக்காடு ஊராட்சிப் பகுதியில் வேளாண் துறை அட்மா திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.மேற்பனைக்காடு முத்துமாரியம்மன் கோயில் வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமுக்கு ஊராட்சி தலை வர் கோவிந்தராசு தலைமை வகித்தார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேளாளர் ஜகுபர் அலி முன்னிலை வகித்தார். முகாமில் கால்நடை மருத்துவர்கள் சேக் முகமது, சிங்காரவடிவேல் ஆகியோர் கால்நடைகளை பரிசோதித்து சிகிச்சை அளித்தனர். முகாமில் பங்கேற்ற ஏராளமான கால்நடைகளுக்கு செயற்கை கருவூட் டல், சினைப் பரி சோதனை, குடற்புழு நீக்கம், மலடு நீக்கம் செய்யப்பட்டதோடு, ஆடுகள் மற்றும் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி உள்ளிட்ட பல் வேறு நோய்களுக்கான தடுப்பூசிகள் போடப்பட் டன.கால்நடை களை நோ யின்றி தொடர்ந்து பரா மரிப்பது குறித்து கால் நடை விவசாயிகளுக்கு முகாமில் ஆலோசனை வழங்கப்பட்டது.இதற்கான ஏற்பாடுகளை மேற்பனைக்காடு ஊராட்சி நிர்வாகத்தினர், கால்நடை துறையினர், வேளாண் துறை அட்மா திட்டக் குழுவினர் ஆகி யோர் இணைந்து செய்திருந்தனர்.

## கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிப்பது எப்படி?

புதுக்கோட்டை, : கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற் கான நவீன தொழில்நுட்பம் குறித்து வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.புதுக்கோட்டை வட் டார வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் (2014-15) கீழ் திருமலைராயசமுத்திரம் கிராமத்தில் கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நவீன தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.முகாமுக்குத் தலைமை வகித்த

வட்டார தொழில்நுட்பக் குழு அமைப்பாள ரும், வேளாண் உதவி இயக்குநருமான ரவிச்சந்திரன் பேசியதாவது:கன்றுகள் மற்றும் கறவை மாடுகளை வாங்கும்போது பால் தரும் அளவு, ஈத்தாக இருப்பது, எந்த நபரும் பால் கறக்க அனுமதிப்பது, அக்டோபர், நவம்பர் மாதங்களில் வாங் குவது உள்ளிட்டவற்றை கருத்தில் கொள்ள வேண் டும். அதிக பால் தரும் மாட் டின் பண்புகளான மாட் டின் தோற்றம் பார்வைக்கு மடி பெரிதாக தோற்றமளித்தல், பக்கங்களில் பார்க்கும்போது நல்ல நீள முக் கோண வடிவமாக தெரிதல், கண்கள் பளிச்சென்றும் கழுத்து மெலிந்தும் இருத் தல், மடி வயிற்றுடன் இணைந்திருந்து ரத்த நாள ங்கள் புடைத்து காணப்படுதல், மடியின் காம்புகள் சராசரி அளவுடனும் சீரான இடைவெளியுடன் இருத்தல், மார்பு விரிந்து தோல் மினுமினுப்பாகவும் மூக்கு பெரிதாகவும் இருக்க வேண்டும் போன்றவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். இதனைத் தொடர்ந்து, கால்நடை டாக்டர் பிரகாஷ், கறவை மாடுகளின் இனங்கள், இனப் பெருக்க மேம்பாட்டு முறை, சரியான சினைத் தருணத்தில் கலப்பு செய்தல், திரவப்போக்கு அதிகமிருந்தால் மருத்துவரை அழைத்துப் பரிசோதித்தல், ஒவ்வொரு இனக் கலப்புக்குப் பிறகும் கன்று ஈனும் முன்பும் ஒருமுறை முழுமையாக பரிசோதனை செய்தல், சரியான நோய் எதிர்ப்புச் சக்தி பெற்றுள்ளவையா எனபதை ஆய்வுசெய்து கண்டறிந்து தடுப்பூசிகளை முன்கூட்டியே போடுதல், தேவையான ஊட்டச்சத்துக்களை அளித்தல், சுகாதாரமான முறையில் தேவையான இட வசதி அளித்தல், பசுக்களில் சினையின் பருவ அறிகுறிகள் மற்றும் செயற்கை கருத்தரித்தலின் நன்மை ஆகியன குறித்து விளக்கிக் கூறினார். பின்னர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகாரி க்க முக்கியப் பங்கு வகிக்கும் அடர் தீவனம் மற்றும் கலப்புத் தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளித்தார்.இதே போல், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருளரசு கால்நடைகளில் கறவை மாடுகளுக்கான கொட்டகைகக் கான இடத்தேர்வு, கொட்ட கைகக்கான காற்று மற்றும்

சூரிய ஒளி, தண்ணீர் வசதி, தீவனம் மற்றும் இதர வசதிகள் குறித்து விளக்கிக் கூறினார். இதனைத் தொடர்ந்து, பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பேண வேண்டிய பசுக்களின் பால் உற்பத்தி அளவு, பால் உற்பத்தி களம், முதல் கன்று ஈனும் வயது, இனப்பெருக்கத் திறன் உள்ளிட்ட விவரங்களை நவாப் ராஜா விரிவாகவும், விளக்கமாக வும் எடுத்துரைத்தார். முகாமில் திருமலையராயசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் கறவை மாடுகள் வளர்த்து வரும் விவசாயிகள் திர ளாகக் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## <u>எண்ணெய் வித்துப் பயிர்களில் தரமான விதை உற்பத்திக்கான நவீன தொழில்நுட்பங்கள்</u>

ஆலங்குடி : எண்ணெய் வித்துப் பயிர்களில் தரமான விதை உற்பத்திக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் ஆலங்குடி அடுத்த வேங்கடக்குளத்தில் நடைபெற்றது.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விதை மை யம் மூலம் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வம்பன் வேளாண் அறிவியல் மையம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகா முக்கு அறிவியல் மைய த்தின் தலைவர் ஞானமலர் தலைமை வகித்துப் பேசியதாவது:தரமான எண்ணெய்வித்து விதைகள், புதிய இரகங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் மட்டு மே உற்பத்தியை பெருக்குவதற்கான எளிய வழியாகும். நிலக்கடலையில் புதிய ரகங்களான கோ 6, கோ 7 ஆகியன வறட்சியை தாங்கி வளர கூடியன. எள் பயிரில் டி.எம்.வி 7 குறுகிய கால பயிராகும். மற்றும் எண்ணெய்ச் சத்து அதிகம் உள்ள ரகமாகும். தரமான விதைகளை நாமே உற்பத்தி செய்வதினால் நல்ல விதை கள் கிடைப்பதுடன் அதிக வருமானமும் கிடைக்கும் என்றார். விதை நுட்பவியல் உதவிப்பேராசிரியர் கதிரவன் கூறுகையில், நிலக்கடலை சாகுபடி செலவில் 40% விதைக்கு செலவாகிறது. தரமான விதைகளை பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். விதை உற்பத்திக்கு நிலத் தேர்வு செய்யும்போது முந்தைய பயிர் அதே பயிராக இருக்கக் கூடாது.

பருவத்தில் பயிர் செய்வது மிகவும் முக்கியமாகும். அதிக மழையோ, அதிக வெயிலோ அறுவடை தருணத்தில் வராமல் இருக்க பருவத்தில் பயிர் செய்ய வேண்டும் என்றார். இனக் கலப்பைத் தவிர்க்க ரகம் மற்றும் பயிர்க் கலப்புகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். செடி பருவம், பூக்கும் பருவம் மற்றும் காய்கள் பிடிக்கும் தருணத்தில் கலப்புகள் இல்லாமல் பார்த்துக்கொள்வது அவசியமாகும். பயிர்களை பூப்பூக்கும் முன்புவிதை சான்றளிப்பு துறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்வதற்கு விதை சான்றளிப்பு அட்டை, விதை வாங்கிய ரசீது அவசியமாகும். அந்தந்த வட்டார விரிவாக்க மையத்தில் பதிவுசெய்துக் கொள்ளலாம் என்றார். உழவியல் துறைப் பேராசிரியர் மாரிமுத்து கூறுகையில் ஒரு ஏக்கருக்கு நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் 160 கிலோ தேவைப்படும். 80 கிலோ அடியுரமாகவும், மீதமுள்ள 80 கிலோ பூக்கும் தருவாயில் மண் அணைத்து இட வேண்டும். இப்படி செய்வதால் காய்கள் திரட்சியுடன் கிடைக்கும். பயிர்களின் எண்ணிக்கையை பராமரிப்பதின் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் என்றார்.புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந் தும் விவசாயிகள் வந்து கலந்து கொண்டனர். முன்னதாக, நோயியல் துறை உதவிப் பேராசிரியர் மதியழகன் வரவேற்றார்.உதவிப்பேராசிரியர் கீதா நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காவிரித்தாய் ஏற்படுத்திய புதிய ஒற்றுமை!**




பழைய காலங்களில், தமிழ் திரைப்படங்களில் பெரும்பாலான காட்சிகள், காவிரியை சுற்றியே அமைந்திருந்தது. ‘‘காவிரித்தாயே.. காவிரித்தாயே.. காதலர் விளையாட பூவிரித்தாயே..’’ என்ற பாடல் மிகப் பிரபலமாக இருந்தது. அந்த காவிரித்தாயின் கருணைதான் தமிழகத்தின் நெற் களஞ்சியமாக விளங்கும் டெல்டா மாவட்டங்களில், விவசாயிகளுக்கு வாழ்வு கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திற்கு சோறு படைக்கும் வகையில், நெல் சாகுபடிக்கும் துணையாக இருக்கிறது. காவிரியில் ஓடும் தண்ணீரை வைத்துத்தான் 7 டெல்டா மாவட்டங்களின் வாழ்வாதாரமே அமைந்துள்ளது. சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924–ம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், காவிரி நதி நீரில் தமிழகத்திற்கு உரிமை இருக்கிறது என்பது பட்டவர்த்தனமாக தெரிகிறது. இருந்தாலும் பின் நாட்களில் மேட்டூர் அணைக்கு போதிய தண்ணீரை காவிரியில் திறந்துவிடாததால், வளமான டெல்டா மாவட்டங்கள், சில நேரங்களில் வறட்சியான மாவட்டங்களாக மாறின. ஏற்கனவே, போதிய அளவு தண்ணீரை தராத நிலையில், மேலும் தண்ணீர் கிடைப்பதை தடுக்கும் ஒரு நிலையை உருவாக்கி விடுமோ? என்று தமிழக மக்கள்

அஞ்சும் நிலையில், கர்நாடகாவில் மேகதாதுவில் ஒரு அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு உருவாக்கி அதற்கான, திட்ட அறிக்கையை தயாரிக்க ரூ.25 கோடி நிதியையும் ஒதுக்கியுள்ளது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, காவிரி மேலாண்மை வாரியமும், காவிரி நீர் ஒழுங்குமுறை ஆணையமும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த காவிரி மேலாண்மை வாரியத்தின் அனுமதியை பெற்றுத்தான், காவிரியில் இரு மாநிலங்களும் எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்த முடியும். அந்த மேலாண்மை வாரியம் இன்னும் அமைக்கப்படாத நிலையில், இவ்வாறு மேகதாதுவில் அணை கட்டினால், மேட்டூர் அணைக்கு போதிய அளவு தண்ணீர் வராது என்ற நிலையில், தமிழ்நாடு முழுவதும் ஒரு கொந்தளிப் பான நிலை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் இதையொட்டி ஒரு வழக்கு தொடர்ந்துள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே குரலில் உடனடியாக மேகதாது அணை கட்டும் பணிகளை கர்நாடக அரசு நிறுத்துவதற்கான உத்தரவை மத்திய அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும் என்றும், காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர் ஒழுங்குமுறை ஆணையத்தையும் உடனடியாக அமைக்க வேண்டும் என்றும் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேறியது. சட்டமன்ற தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அடுத்த நாளே தமிழக அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக பிரதமரை சந்தித்து வலியுறுத்தியது ஒட்டுமொத்த தமிழ்நாட்டையே மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இதை, இதைத்தான் தமிழ்நாடு எதிர்பார்த்தது. கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில், மாநிலத்தின் பொது பிரச்சினைக்காக அனைத்து கட்சிகளின் எம்.பி.க்களும் ஒரே அணியில் நின்று போராடும்போது, தமிழ்நாட்டில் மட்டும் ஆளுக்கொரு பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டிருக்கிறார்களே, இந்தநிலை எப்போது மாறும் என்று, தமிழக மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். காவிரித் தாய் ஒரு நல்ல தொடக்கத்தை உருவாக்கி தந்து விட்டாள். இதோடு

நின்றுவிடாமல், அரசியல் என்று வரும்போது தனித்தனியாக நின்று கொள்ளுங்கள். ஆனால், மாநிலத்தின் மொத்த பிரச்சினை என்று வரும் போது, ''இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' என்ற நிலையில், இன்றுபோல் என்றும் அனைத்து கட்சிகளும் ஒன்றாக இருந்து தமிழகத்துக்கு தேவையான நன்மைகளை பெற்றுத்தர வேண்டும் என்பது தான் தமிழ்த்தாயின் ஆசை.

**ரசாயன உரங்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**



நடப்பு பருவ சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் பழனிசாமி கூறினார்.
குறைதீர்க்கும்கூட்டம்
நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு பேசினர். இதன் விவரம் பின்வருமாறு;- காவிரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்க பொது செயலாளர் குருகோவிகணேசன்:- பம்பு செட்டு விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 12 மணியில் இருந்து 15 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மாவட்ட அமைப்பாளர் முஜீபுஷரீக்:- வேதாரண்யம் தாலுகா, கோவில்பத்து மற்றும் கீழ்வேளூர் தாலுகா வேட்டைக்காரனிருப்பு தென்பகுதி உள்ளிட்ட அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடங்களில் அத்துமீறி கடல் மேட்டு பகுதியில் எடுக்கப்படும் மணல் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும். ஆற்று பாசன சங்க தலைவர் ராமகிருஷ்ணன்:- கங்களாஞ்சேரி வேளாண்மை கிடங்கு இடிந்து விழும் நிலையில்

உள்ளதால், உடனடியாக நடவடிக்கை எடுத்து கிடங்கை கட்டித்தர வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சம்பந்தம்:- 2012-2013-ம் ஆண்டின் தேசிய வேளாண்மை பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் கடன் பெற்ற விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள காப்பீட்டு தொகையை வழங்க வேண்டும். மாநில வேளாண்மை திட்ட குழு உறுப்பினர் சிவஞானம்:- உம்பளச்சேரி கிழக்கில் 3 கிலோமீட்டர் தூரத்தில் ஷட்டர் அமைத்து கடலில் வீணாக கலக்கும் தண்ணீரை சேமிக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

ரசாயனஉரங்கள்

பின்னர் கலெக்டர் பழனிசாமி கூறியதாவது:- நடப்பு பருவ நெல் (கோடை) கரும்பு, பருத்தி மற்றும் இதர பயிர்களுக்கு தேவையான ரசாயன உரங்கள் யூரியா 1,678 டன்னும், டி.ஏ.பி. 1,297 டன்னும், எம்.ஓ.பி. 938 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 324 டன்னும் கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக கூட்டத்தில் கலெக்டர் அறிவுறுத்தலின் பேரில் தோட்டக்கலை துறை மற்றும் சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பவர் பாயிண்ட் விவசாயி களுக்கு பசுமைக்குடில், பாலிதீன் கூடம் என்ற தலைப்பின் கீழ் பல்வேறு வகையான பாலிதீன் கூடம் அமைக்கும் முறை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு உதவி பேராசிரியர்கள் ரவி, இளையபாரதி ஆகியோர் விளக்கி பேசினர். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெஞ்சமின்பாபு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ராஜேந்திரபிரசாத், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) கணேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சண்முகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

<u>கறவை மாடுகள், வெள்ளாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை 4–ந் தேதி நடக்கிறது</u>



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் கறவை மாடுகள், வெள்ளாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை வருகிற 4–ந் தேதி நடக்கிறது. இது குறித்து மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>இலவச கறவை மாடு</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசின் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் 2014–15–ம் ஆண்டில் 700 பேருக்கு பசுக்களும், 4 ஆயிரத்து 148 பேருக்கு 16 ஆயிரத்து 592 ஆடுகளும் வழங்கப்பட்டு உள்ளன. இதுவரை மாவட்டத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 520 பேருக்கு கறவை மாடும், 14 ஆயிரத்து 168 பேருக்கு 56 ஆயிரத்து 672 ஆடுகளும் வழங்கப்பட்டு உள்ளன. மேலும் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. பயனாளிகளை ஊக்குவிக்கும் வகையில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிக்கு தமிழ்புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

<u>4–ந் தேதி</u>

இந்த நிலையில் கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் எடையை அதிகரிக்கவும் வருகிற 4–ந் தேதி கறவை மாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும்,

வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கும் குடற்புழு நீக்க முகாமும் நடக்கிறது. விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

**உடன்குடி, குரும்பூர் பகுதிகளில் பலத்த மழை**

திருச்செந்தூர், குரும்பூர், ஆழ்வார்திருநகரி, உடன்குடி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் நீடித்த மழையால் சாலைகள், தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. உடன்குடி அரசு ஆஸ்பத்திரியின் முன்புள்ள வாடாச்சி மரம் வேரோடு சரிந்து, அங்கு நின்ற டிராக்டரின் மீது விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்பட வில்லை. திருச்செந்தூர், ஆறுமுகநேரி, காயல்பட்டினம், ஆத்தூர், ஏரல், நாசரேத், சாத்தான்குளம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகாலையில் லேசான மழை பெய்தது.